# செயலட்டை – தமிழ் (03)

## பிரமி கல்வி நிலையம்

S. மோகன் 0779685514

மாணவர் பெயர் : ...................................

**அறிவுறுத்தல்.**

* பந்தி / பாடல்களை வாசிக்குக.
* பந்தி / பாடல்களை மாத்திரம் துணையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்குக.

**01)** காலைக் கதிரவன் தன் கடமை உணர்வோடு கிழக்கு வானிலே செம்மஞ்சள் நிறப் பந்துபோல மெதுவாக மேலெழுகிறான். கதிரவனைக் கண்ட நிலவு மகள் தன் கடமையை முடித்து நாணத்துடன் ஒளிந்து கொள்கிறாள். கடிகாரப் பறவைகளான சேவல்களும் கரைந்து சத்தமிடும் காகங்களும் விடியலை அறிந்து, கதிரவனை வரவேற்கின்றன. ஆலயங்களின் காண்டாமணி ஓசை காதில் கணீரென ஒலிக்க கூட்டங் கூட்டமாகப் பறந்து திரியும் பட்சிகளின் இனிய கானம் சூழலை இனிமையாக்குகின்றது.

1. பந்தியில் வர்ணிக்கப்படும் காட்சி எவ்வேளைக்குரியது?

   ..........................................................................................................

2. அடைமொழிச் சொல்லொன்றை பந்தியில் இருந்து எழுதுக.

   ..........................................................................................................

3. உயர்திணை ஒருமைப் பெண்பால் பெயர்சொல் ஒன்றை பந்தியில் இருந்து எழுதுக.

   ..........................................................................................................

4. இங்கு கதிரவனை வரவேற்பவை எவை?

   ..........................................................................................................

5. பறவைகள் என்பதன் ஒத்த கருத்துச் சொல்லை எழுதுக.

   ..........................................................................................................

6. இங்கு சூழலை இனிமையாக்குவது எது?

   ..........................................................................................................

**02)** ஒரு நாள் சிபிச்சக்கரவர்த்தியின் சிறந்த குணத்தைச் சோதிக்க எமனும் இந்திரனும் விரும்பினர். எமன் ஒரு புறாவாகவும் இந்திரன் ஒரு பருந்தாகவும் உருமாறினார்கள். அதன் பின்னர் பருந்து புறாவைத் துரத்துவது போல் விரட்டிக்கொண்டு வந்தது. அவ்வாறு துரத்தப்பட்டு வந்த புறா சிபிச்சக்கரவர்த்தியின் மடியில் பதறி விழுந்தது. ‘‘என்னைக் காப்பாற்றுங்கள்! எனக்கு அபயம் அளியுங்கள்’’ என அவலக்குரல் எழுப்பியது.

(i) புறாவாக உருமாறி சிபிச்சக்கரவர்த்தியின் மடியில் விழுந்தவர் யார்?

..........................................................................................................

(ii) பந்தியில் முதலாவது வரியில் இடம்பெறும் பெயரடைமொழி ஒன்றை எழுதுக.

..........................................................................................................

S.MOHAN

(iii) உயர்திணை, பன்மை, இறந்தகால வினைச் சொல் ஒன்றைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

…………………………………………………………………………………………………

(iv) பெயராகவும், வினையாகவும் வரும் சொல் ஒன்றை பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

………………………………………………………………………………………………….

(v) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உவமானத்தை எழுதுக.

…………………………………………………………………………………………………

(vi) தஞ்சம் என்பதன் ஒத்த சொல்லை பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக.

…………………………………………………………………………………………………

**03)** லூயி பாஸ்ட்டர் என்பவர் புகழ் பெற்ற விஞ்ஞானியாவார். பாஸ்ட்டர் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினார். இவர் எதனையும் ஆராயும் இயல்பையும் சிந்தனைத் திறனையும் கொண்டவர். உணவுப் பொருட்கள் பழுதடைவதற்கு நுண்ணுயிர்களே காரணம் என கண்டுபிடித்தார். காற்றில் நுண்ணுயிர்கள் பலவுள்ளன. அவையே நொதித்தல், அழுகல், பழுதடைதல் ஆகியவற்றிற்கு காரணம் என கண்டறிந்து வெளிப்படுத்தினார்.

1. உணவுப் பொருட்கள் பழுதடைய காரணமானவை எவை?

   ……………………………………………………………………………………………..

2. ‘‘இகழ்’’ என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக?

   ……………………………………………………………………………………………..

3. பாஸ்ட்டர் எத்திறனைக் கொண்டவர்?

   ……………………………………………………………………………………………..

4. ‘‘கண்டறிந்து’’ எனும் சொல்லை பிரித்தெழுதுக?

   ……………………………………………………………………………………………..

5. சங்கிலிக் கொம்பு, இரட்டைக் கொம்பு ஆகிய இரண்டும் கொண்ட எழுத்துக்களையுடைய சொல்லை பந்தியிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.

   ……………………………………………………………………………………………..

6. பந்தியில் குறிப்பிடப்படும் இணைமொழியை எழுதுக.

   ……………………………………………………………………………………………..

S.MOHAN

**04)** மாமரத்தின் கீழேயுள்ள புற்றரையில் நின்ற சின்ன சின்ன கோழிக்குஞ்சுகள் கள்ளங்கபடமின்றி தானியங்களைக் கொத்திக் கொத்தி உண்டன. மரத்திலிருந்து கன்னங்கரிய காகம் ஒன்று தனது கூரிய கண்களால் கோழிக் குஞ்சுகளை அவதானித்தது. பின்பு காகம் இரையாகக் கோழி குஞ்சு ஒன்றைத் தூக்கிக் கொண்டு சென்றது. குஞ்சுகளின் கீச்சிடும் சத்தத்தைக் கேட்ட தாய்க் கோழி விரைவாக குஞ்சுகளை மடியில் சேர்த்துக் கொண்டது.

1. இப்பந்தியில் குறிப்பிடப்படும் இரு பிராணிகளின் பெயர்களை எழுதுக.

   ………………………………………………………………………………………

2. இப்பந்தியில் இடம்பெற்றுள்ள இணைமொழியை எழுதுக.

   ………………………………………………………………………………………

3. விழிகளால் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.

   ………………………………………………………………………………………

4. விசிறியும் சுழியும் , இரட்டைக்கொம்பும் வந்துள்ள ஒரு சொல்லைப் பந்தியிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.

   ………………………………………………………………………………………

5. புற்றரை என்பதைப் பிரித்து எழுதுக.

   ………………………………………………………………………………………

**05)**

**சின்னக் குருவி பறக்கிறது**

**சிறகைக் காற்றில் உதைக்கிறது**

**திண்ணைக் குந்தில் இருக்கின்றேன்**

**திரும்பிப் பார்த்துச் சிரிக்கிறது**

1. குருவி எதனைக் காற்றில் உதைக்கிறது?

………………………………………………………………………………………

2. இங்கு இடம்பெறும் பெயர் அடைமொழியை எழுதுக

………………………………………………………………………………………

3. சிரிக்கிறது என்பது எக்காலத்துக்குரிய சொல்

………………………………………………………………………………………

4. பாடலில் இடம் பெறும் தன்மை ஒருமை வினைமுற்றை எழுதுக.

………………………………………………………………………………………

S.MOHAN

**06)** காட்சிப்படங்களை பார்த்து நிகழ்காலத்தில் மூன்று வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் நான்கு சொற்களுக்குக் குறையாதிருத்தல் வேண்டும். எழுவாய் பயிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்)



.............................................................................................................................................

.............................................................................................................................................


.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................



.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

.............................................................................................................................................

S. MOHAN